**நிகழும் திருவள்ளுவராண்டு ஸ்ரீவிளம்பி வருடம் 2019ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் தேதி மாசி மாதம் 16ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள தாராபுரம் நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் விபரம்.**

----

1. தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட புதிய அலுவலக கட்டத்தின் மேற்குப்புற சாலையின் தென்மேற்கு பகுதியில் உள்ள இடத்தில் இரண்டு வஙகிகளுக்கு ஏ.டி.எம்.(ATM) அறை கட்டும் பணிக்கு ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 22.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.தஙகராஜ்,<br>ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 1.88% அதிகம் |
| 2. | திரு.எ.கணேசன்,<br>ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 0.31% குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.31% குறைவாக கொடுத்துள்ள திரு.ஆர்.கணேசன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

2, தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட புதிய அலுவலக கட்டத்திற்கு நகர்மன்ற கூடத்திற்கு (Wall Pannelling) சுவற்றில் அழகு பலகை அடைப்பு செய்து அமைக்கும் பணிக்கு ரூ.20.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 22.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திருவாளர்.நீலகிரி பர்னிச்சர் வேல்டு,<br>கோயம்புத்தூர். | மதிப்பீட்டு விலையை விட 0.33% குறைவு |
| 2. | திருவாளர்.ஐஸ்வரியா பர்னிச்சர்,<br>கோயம்புத்தூர். | மதிப்பீட்டு விலையை விட 1.21% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.33% குறைவாக கொடுத்துள்ள திருவாளர்.நீலகிரி பர்னிச்சர் வேல்டு, கோயம்புத்தூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

3, தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட புதிய அலுவலக கட்டத்திற்கு நகர்மன்ற கூடம் மற்றும் நகர்மன்ற தலைவர் அறையில் மேஜை மற்றும் நாற்காலிகள்அமைக்கும் பணிக்கு ரூ.20.00

இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 22.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திருவாளர்.நீலகிரி பர்னிச்சர் வேல்டு, கோயம்புத்தூர். | மதிப்பீட்டு விலையை விட 0.39% குறைவு |
| 2. | திருவாளர்.ஐஸ்வரியா பர்னிச்சர், கோயம்புத்தூர். | மதிப்பீட்டு விலையை விட 3.62% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.39% குறைவாக கொடுத்துள்ள திருவாளர்.நீலகிரி பர்னிச்சர் வேல்டு, கோயம்புத்தூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

4. தாராபுரம் நகராட்சியில் குடிநீர் நிதி 2018–19ன் கீழ் நகராட்சிக்கு உட்பட்ட தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள அனைத்து மோட்டார்கள், பம்பு செட்டுகள், உயரழுத்த மின்மாற்றி மற்றும் பேனல் போர்டுகள் வருடாந்திர பராமரிப்பு பணிக்கு ரூ.3.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 31.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.எ.கணேசன், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 1.25 % குறைவு |
| 2 | திரு.எம்.மாரிமுத்து, ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விலையை விட 1.47 % அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.25% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு.எ.கணேசன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

5. தாராபுரம் நகராட்சியில் குடிநீர் நிதி 2018–19ன் கீழ் வார்டு எண் 1, வார்டு எண் 12, வார்டு 20, வார்டு எண் 22 ஆகிய பகுதிகளில் பழுதடைந்த மின் இணைப்பு திட்டுகள், குடிநீர் தொட்டிகளை இடித்து அப்புறப்படுத்தி புதிதாக கட்டும் பணிக்கு ரூ.2.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 31.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| **1.** | திரு.எ.கணேசன்,<br>ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட **3.00** %<br>அதிகம் |
| **2** | திரு.எம்.மாரிமுத்து,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விலையை விட **0.17** %<br>குறைவு |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **0.17**% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு.எம்.மாரிமுத்து, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**6.** தாராபுரம் நகராட்சிக்கு சொந்தமான வணிகவளாகக் கடைஎண்.**9**க்கு **8** முறை ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில், **2**, **5** **மற்றும்** 8வது அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள்.

| வ. எண் | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்ந்தப்புள்ளி கேள்வித் தொகை மாதம் ஒன்றிற்கு | | |
|---|---|---|---|---|
| | | 04.10.2018 | 23.11.2018 | 23.01.2019 |
| 1. | **திரு.ஹபீப்ரகுமான்,<br>த.பெ.அப்துல்முத்தலீப்,<br>68,உடுமலைரோடு,<br>தாராபுரம்.** | **900/–** | **–** | **–** |
| 2 | **திரு.சையது இப்ராஹீம்,<br>97,பழைய காவல்நிலைய<br>வீதி, தாராபுரம்.** | **–** | **1250/–** | **1400/–** |

**அலுவலகக் குறிப்பு :**

வணிகவளாகக் கடைஎண்.**9**க்கு, **8** முறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 1**,**3**,**4**,**6 **மற்றும்** 7வது அழைப்புகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. **8வது அழைப்பில் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக திரு.சையது இப்ராகீம் என்பவர் மாத வாடகை ரூ.**1400/-**க்கு** வைத்துகொள்ள ஒப்பந்தப்புள்ளி வழஙகியுள்ளார். **மேலும் வணிகவளாகக்கடைஎண்.**9 **முகப்பு பகுதியில் இல்லாமல், உட்பகுதியில் உள்ளதால் ஏலம் கோரும் எவரும் வரவாய்பில்லை என்பதாலும்,** இது முந்தைய வாடகைத் தொகையை விட கூடுதலாக **உள்ளதாலும்,** நகராட்சியின் வருவாய் இழப்பினை தவிர்க்க வருவாய் ஆய்வர் தனது குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க**,** தற்போது வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.**1400/–**ஐ ஏற்று மன்றம் அனுமதி வழஙகலாம்.
**ந.க.எண்.**4451**/**2013**/அ3**

7. தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு **26** பழைய வீட்டு வசதி வாரிய பகுதியில் கட்டப்பட்டு வரும் சிறு உரக்கிடஙகிற்கு தண்ணீர் வசதி மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு தொட்டிகள் அமைக்கும் பணிக்கு ரூ.**5.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு

31.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திருவாளர்.எம்.முருகேசன் அன் கோ, ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 0.07% குறைவு |
| 2. | திரு.ஆர்.தஙகராஜ், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 0.44% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.07% குறைவாக கொடுத்துள்ள திருவாளர்.எம்.முருகேசன் அன் கோ, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

8. தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு 9 சந்தைப்பேட்டை வளாகத்தில் கட்டப்பட்டு வரும் சிறு உரக்கிடஙகிற்கு தண்ணீர் வசதி மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு தொட்டிகள் அமைக்கும் பணிக்கு ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 31.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திருவாளர்.எம்.முருகேசன் அன் கோ, ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 1.02% அதிகம் |
| 2. | திரு.ஆர்.தஙகராஜ், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 0.05% குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.05% குறைவாக கொடுத்துள்ள திருஆர்தஙகராஜ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

9. தாராபுரம் நகராட்சி பகுதியில் உள்ள வார்டு எண்.6, பிளாக் எண்.21, நகரளவு எண்.67/1, கொட்டாபுளிபாளையம் சாலையில் உள்ள கதவுஎண்.58இல் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள வணிக கட்டிடத்திற்கு இலவச பட்டா வழஙகும்படி கேட்டும், ஆக்கிரமிப்பினை அகற்றக்கூடாது என சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.9075/2018ல் திரு.அழகர்சாமி என்பவர் வாதியாகவும், அரசு செயலாளர் அவர்களை 1ம் பிரதிவாதியாகவும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களை 2ம் பிரதிவாதியாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் திருப்பூர் அவர்களை 3ம் பிரதிவாதியாகவும், மாவட்ட வருவாய் அலுவலர், திருப்பூர்

அவர்களை 4ம் பிரதிவாதியாகவும், வட்டாட்சியர், தாராபுரம் அவர்களை 5ம் பிரதிவாதியாகவும், நகராட்சி ஆணையர் அவர்களை 6ம் பிரதிவாதியாகவும் சேர்த்து தொடரப்பட்ட வழக்குகள் மீது நகராட்சி சார்பாக சென்னை வழக்கறிஞர் திரு.பி.ஸ்ரீனிவாஸ் அவர்கள் மூலம் வழக்கு நடத்தவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
**ந.க.எண்.எப்1/ 2575/ 2019**

**அலுவலக குறிப்பு – ஒப்புதல் அளிக்கலாம்**

10. தாராபுரம் நகராட்சியில் **7.02** சதுர கி.மீ பரப்பளவு கொண்ட **30** வார்டுகளை உள்ளடக்கியதாகும். இந்நகராட்சியில் குடிநீர் பிரிவில் **1** எண்ணிக்கை கொண்ட குடிநீர் லாரி உள்ளது. இந்த லாரி மூலம் நகராட்சியின் பல்வேறு பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், வறட்சி காலத்தில் நகராட்சி பகுதிகளுக்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த லாரியினை இயக்க நிரந்தர ஓட்டுநர் இல்லாத காரணத்தினாலும், நகராட்சியின் வருவாயில் **49** சதவீதத்திற்கு மேல் ஊதியம் செலவிடப்படுவதால் புதிதாக பணியாளர்கள் நியமனம் செய்ய இயலாத நிலை உள்ளதால் குடிநீர் விநியோகப்பணி நகராட்சியின் அத்தியாவசியப் பணியாக லாரிகள் மூலம் குடிநீர் விநியோக பணி பாதிப்பு ஏற்படக் கூடாதென்பதற்காக நகராட்சிக்கு தேவைப்படும் **1** எண்ணிக்கை லாரி ஓட்டுநரை திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ள குறைந்த பட்ச அதாவது நாள் ஒன்றுக்கு ரூ.**445/–** வீதம் (**வரிசை எண்.14**) தினக்கூலியினை அடிப்படையாக கொண்டு, சுயஉதவிக்குழு மூலம் பணியாளர் விநியோகம் செய்ய ஆண்டு ஒன்றுக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.**2.00** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலகக் குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இதற்கு ஆகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**11.** தாராபுரம் நகராட்சியில் குடிநீர் நிதி **2018–19**ன் கீழ் குடிநீர் உபயோகத்திற்கான (Sodium hypo chlorite) திரவ குளோரின் விநியோகம் செய்யும் பணி மற்றும் திரவ குளோரினேசன் இயந்திரம் வருடாந்திர பராமரிப்பு பணிக்கு ரூ.**10.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு **27.02.2019** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி விகிதம்** |
|---|---|---|
| **1.** | M/S.Sruthi Alum Industry<br>ஒப்பந்ததாரர், சென்னை. | மதிப்பீட்டு விலையை விட **2.86** % அதிகம் |
| **2** | M/S.Tamilnadu Chemicals Industries<br>ஒப்பந்ததாரர், சென்னை. | மதிப்பீட்டு விலையை விட **14.29** % குறைவு |
| **3** | M/S. SK Enterprises<br>ஒப்பந்ததாரர், சென்னை. | மதிப்பீட்டு விலையை விட **12.50** % குறைவு |

பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 14.29 % குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள M/S.Tamilnadu Chemicals Industries, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**12.** தாராபுரம் நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு எதிர்வரும் 2019–2020ஆம் நிதியாண்டிற்கு அரிசி, மளிகைப் பொருட்கள் காய்கறிகள், பால், எரிவாயு உருளை, சமையல் உபகரணஙகள் பழுது பார்க்கும் பணி மற்றும் இதர செலவினத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.25.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.2578 / 2015 / இ1**

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி தொகையினை நகராட்சி பொதுநிதி 2019–20இல் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

13. தாராபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 12 மேல்நிலைத் தொட்டிகள் மூலம் நகரின் அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. குடிநீர் விநியோகத்தின் போது ளோரின் பரிசோதனை மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வரும் CHLORO SCOPE பழுது ஏற்பட்டுள்ளதால் குளோரின் பரிசோதனை சரிவர மேற்கொள்ள இயலவில்லை. எனவே, தினசரி அறிக்கை சமர்ப்பிக்க 10 எண்ணிக்கையிலான CHLORO SCOPE + O.TOLIDIN REAGENT வாஙகப் வேண்டியது அவசியமாகிறது. எனவே, பணியின் அவரச அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு(15)–ன் கீழ் CHLORO SCOPE + O.TOLIDIN REAGENT இயந்திரம் வாஙகிய பயன்படும் பணிக்கு ரூ.8500/–ஐ ஒப்பந்ததாரர் M/s.Star Scientiffic, ஈரோடு அவர்களுக்கு வழஙகியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

14. தாராபுரம் நகராட்சி தூய்மை பாரத திட்டத்தின் கீழ் நகராட்சியில் முதன்மை சேகரிப்பு பணிகளில் அனைத்து வீடுகளிலும், 100 சதவீதம் குப்பை சேகரிக்கத் தேவையான பேட்டரி மூலம் இயஙகும் வாகனம் வாஙகும் பணிக்கு ரூ.50.40 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு தூய்மை பாரத இயக்கம்(SBM) – 2018–19ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்ய ஏதுவாக நகர்மன்ற தீர்மான எண் 810 நாள் 21.01.2019ன் இயற்றி நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதின் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.1191/பி3/2019/ நாள்.21.01.2019 தேதியிட்ட கடிதத்தில் மேற்படி திட்டத்திற்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ரூ.இலட்சத்தில்)

| நகராட்சி பெயர் | மதிப்பீட்டு தொகை | மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி (35%) | மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி (55%) | நகராட்சி பங்களிப்பு (10%) |
|---|---|---|---|---|
| தாராபுரம் | 50.40 | 17.64 | 27.72 | 5.04 |

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் பதிவு செய்யலாம்.
2) மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டில் நகராட்சி பங்குத் தொகை (ULB Contribution) ரூ.5.04 இலட்சத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

15. தாராபுரம் நகராட்சி தூய்மை பாரத திட்டத்தின் கீழ் நகராட்சி உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை நவீன முறையில் (Bio-Mining) சுத்தம் செய்து உரக்கிடஙகினை புதுப்பிக்கும் பணிக்கு ரூ.**279.00** இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு தூய்மை பாரத இயக்கம்(SBM) – **2018–19**ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்ய ஏதுவாக நகர்மன்ற தீர்மான எண் **808** நாள் **21.01.2019**ன் இயற்றி நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதின் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.**1191**/பி**3**/**2019**/ நாள்.**21.01.2019** தேதியிட்ட கடிதத்தில் மேற்படி திட்டத்திற்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ரூ.இலட்சத்தில்)

| நகராட்சி பெயர் | மதிப்பீட்டு தொகை | மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி (35%) | மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி (55%) | நகராட்சி பங்களிப்பு (10%) |
|---|---|---|---|---|
| தாராபுரம் | 279.00 | 97.65 | 153.45 | 27.90 |

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் பதிவு செய்யலாம்.
2) மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டில் நகராட்சி பங்குத் தொகை (ULB Contribution) ரூ.27.90 இலட்சத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**16.** தாராபுரம் நகராட்சி பழைய காவல்நிலைய வீதி நகராட்சி பள்ளியில் மேற்கூரை சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் மராமத்துப் பணிக்கு கல்வி நிதி **2018–19**இன் கீழ் ரூ.**5.60** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு **07.02.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | திருவாளர்கள்.SRS.கண்ஸ்ட்ரக்சன்ஸ் | மதிப்பீட்டை விட 8.18% குறைவு |
| 2 | திரு.KS.கோவிந்தராஜ் | மதிப்பீட்டை விட 4.04% குறைவு |

மேற்படி, பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 8.18% (ரூ.452775.00) குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர்கள். SRS.கண்ஸ்ட்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்:2328/2018/இ1**

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி தொகையினை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

17. தாராபுரம் நகராட்சியில் தொழில்வரி, குடிநீர் வரி, சொத்துவரி மற்றும் அரசு திட்டங்களுக்கான படிவங்கள் நகல் எடுக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே தேவை மற்றும் பயன்பாடு கருதி புதியதாக ஒளி அச்சு நகல் இயந்திரம் (Xerox Machine) Government E-Market மூலம் பரிந்துரைக்கப்பட்டுள்ள DGS&D விலை விகிதத்தில் இந்துஸ்தான் ஆட்டோ மெஷின் நிறுவனத்தின் மூலம் Kyocera TASKalfa-3212i ஒளி அச்சு நகல் இயந்திரம் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.45 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.680 / 2019 / இ1**

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி தொகையினை நகராட்சி பொதுநிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

18. தாராபுரம் நகராட்சி தூய்மை இந்தியா இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19க்கு பேட்டரி மூலம் இயஙகும் வாகனம் வாஙகுதல் (28 எண்ணிக்கை) பணிக்கு ரூ.50.40 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 15.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திருவாளர்.பிரியம் இண்டஸ்ட்ரீஸ் அண்டு இன்ஜினீரியங பிரைவேட் லிமிட், சென்னை. | மதிப்பீட்டு விலையை விட 0.28% குறைவு |
| 2. | திருவாளர்.அருண் இந்தியா மோட்டார்ஸ், சேலம். | மதிப்பீட்டு விலையை விட 0.06% குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.28% குறைவாக கொடுத்துள்ள திருவாளர்.பிரியம் இண்டஸ்ட்ரீஸ் அண்டு இன்ஜினீரியங பிரைவேட்

லிமிட், சென்னை ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

19. தாராபுரம் நகராட்சியில் உள்ள நகராட்சி அலுவலக வளாகம், பேருந்து நிலையம், அம்மா உணவகம் மற்றும் தலைமை நீரேற்று நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள தீயணைப்பு கருவியின் உபயோகிக்கும் காலம் காலாவதியாகிவிட்டது. எனவே அக்கருவிகளை மறுநிரப்புதல்(Refilling) செய்து விபத்துகளை தடுக்க ஏதுவாக தயார் நிலையில் வைக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்கண்ட இடங்களில் உள்ள தீயணைப்பு கருவிகளை மறுநிரப்புதல் (Refilling) செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.436 / 2019 / இ1**

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி தொகையினை நகராட்சி பொதுநிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

20. தாராபுரம் நகராட்சி குடிநீர் பிரிவு தண்ணீர் லாரி TN-33-V-9442 க்கு இன்சூரன்ஸ் கட்டணம், FC தகுதிகான சான்று பெறவும், சாலை வரி மற்றும் அதற்குண்டான மேல்வரி ஆகியவை செலுத்த 2018–19ம் ஆண்டுக்கு செலுத்த உத்தேசமாக ரூ.200000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

21. தாராபுரம் நகராட்சியில் தற்போது இரண்டு குடிநீர் திட்டங்களின் மூலம் நகரின் பல்வேறு பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி இரண்டு குடிநீர் திட்டத்தின் மூலம் நகரின் பல்வேறு பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும் போது குடிநீரினை மாதத்திற்கு ஒருமுறை மற்றும் தேவையான நேரஙகளில் தேவையான இடஙகளில் குடிநீர் பரிசோதனை செய்ய வேண்டியுள்ளது. எனவே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசோதனைக் கூடம் அல்லது அரசு பரிசோதனை கூடத்தில் தொடர்ந்து பரிசோதனை செய்ய செலுத்த வேண்டிய உத்தேசக் கட்டணத் தொகை ரூ.1,20,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி ஆகும் செலவினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

22. தாராபுரம் நகராட்சி குடிநீர் லாரி TN 33 V 9442 க்கு **1–4–2019** முதல் **31–3–2020**ம் ஆண்டுக்கு டீசல் பிடித்து உபயோகப்படுத்த மாதம் ஒன்றுக்கு உத்தேசமாக ரூ.**16500/–** வீதம் ஓர் ஆண்டுக்கு உத்தேசமாக ரூ.**200000/–**ம் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமரி வழஙகலாம்.

23. தாராபுரம் நகராட்சி **2019–2020** ஆம் நிதியாண்டில் பொறியியல் பிரிவில் நடைபெறும் பல்வேறு திட்டப்பணி மற்றும் பொதுப்பணிகளின் ஒப்பந்தபுள்ளியினை மாநில மற்றும் மாவட்ட அளவில் நாளிதழில் விளம்பரம் செய்யவும், வளர்ச்சி பணிகளை நாளிதழில் விளம்பரம் செய்யவும் விளம்பரக் கட்டணத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**7.00** லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி தொகையினை நகராட்சி பொதுநிதி **2019–20**இல் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

24. தாராபுரம் நகராட்சி **10**மேற்கு பலிஜ்வார் நகராட்சி தொடக்கப்பள்ளியில் மேற்கூரை மாற்றியமைத்தல் மற்றும் மராமத்துப் பணிக்கு கல்வி நிதி **2018–19**இன் கீழ் ரூ.**4.50** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு **07.02.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு,

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **விலை விகிதம்** |
|---|---|---|
| 1 | திரு.N.சாமியப்பன் | மதிப்பீட்டை விட **32.77%** அதிகம் |
| 2 | திருவாளர்கள்.ஸ்ரீ சக்தி விநாயகா கண்ஸ்ட்ரக்சன்ஸ் அன்டு வுட்ஒர்க்ஸ் | மதிப்பீட்டை விட **1.43%** குறைவு |
| 3 | திரு.K.S.கோவிந்தராஜ் | மதிப்பீட்டை விட **1.69%** அதிகம் |

மேற்படி, பணிக்கு வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **1.43%** (ரூ.**358029.50.00**) குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர்கள்.ஸ்ரீ சக்தி விநாயகா கண்ஸ்ட்ரக்சன்ஸ் அன்டு வுட்ஒர்க்ஸ், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்: 3623/2018/இ1**

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி தொகையினை கல்வி நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

25. தாராபுரம் நகராட்சியில் அம்மா உணவகத்தில் அன்னலட்சுமி மகளிர் சிக்கனம் மற்றும் நாணயச் சங்கம் சுய உதவிக்குழு மூலம் பணியாற்றும் பணியாளர்கள் 12 நபர்களுக்கு 2019–2020ஆம் நிதியாண்டிற்கு ஊதியம் வழங்க உத்தேச செலவினம் ரூ.11.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.3287/2015/இ1**

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி தொகையினை நகராட்சி பொதுநிதி 2019–20இல் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

26. தாராபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவித்தி திட்டம் எண்.2 –ல், நகரளவு வார்டு எண்.6, பிளாக் எண்.28, நகரளவு எண்.24/4 மற்றும் 31/2 பாகத்தில் அமைந்துள்ள 'C1 – C1' 40 அடி அகல திட்டசாலை இடத்தினை மனுதாரர்கள் 1. H.A.லியாகத் அலி S/o.ஹாஜி அப்துல் குத்தூாஸ் 2. A.கைருன்னீசா க/பெ. S.N.M அப்துல் ரஹீம் 3.A.சையது இப்ராஹிம், S/o.ஹாஜி அப்துல் குத்தூாஸ் 4 ஹாஜியா புஷ்ராபேகம் ,w/o A.சிராஜ்தின் 5. H.A. அப்துல்5 ரஹீம் S/o.ஹாஜி அப்துல் குத்தூாஸ் 6.டாக்டர் ஜனாப் ஹாஜி A.ஜபருல்லா த/பெ. H.M. ஹாஜி மா்ஹீம் அப்துல் குத்தூாஸ் ஆகியோர், நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்க சம்மதம் தெரிவித்து 13.02.2019–ல் விண்ணப்பம் சமா்ப்பித்துள்ளார்கள். மேற்கண்ட விண்ணப்பம் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுறது

**ந.க.எண்.507/2019/எப்.1**

**<u>அலுவலக குறிப்பு.</u>**

மேற்கண்ட 'C1 – C1' 40 அடி அகல திட்டசாலையானது, அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.2 –ல், திட்ட அட்டவணைப்படி உள்ளூர்திட்ட குழுமமே நில ஆர்ஜிதம் செய்து சாலை அமைக்கப்பட வேண்டும் என உள்ளது. (To be formed by LPA) இருப்பினும் மனுதாரர்களே மேற்படி திட்டச்சாலை இடத்தினை நகராட்சிக்கு தானமாக வழங்க முன்வந்துள்ளதால், C1 – C1' 40 அடி அகல திட்டசாலையினை தானமாக பெற, நடவடிக்கை எடுக்க மன்றம் அனுமதிக்கலாம்.

27.தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு) சட்ட துணை விதிகளில் 3(4)(iV) ல் பேருந்து நிலையத்தின் நுழைவாயில் மற்றும் வெளியேறும் வாயில் 50 மீட்டர் நிளம் உள்ளதை 25.00 மீட்டராக மாற்றி அமைக்கவும், துணை விதி 3(4)1ல் அரசு கட்டிடங்களின் நுழைவாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 10.00 மீட்டர் என உள்ளதை 6.00 மீட்டராக மாற்றி அமைக்கும்படியும் துணை விதி 3(4) (VIII) ல் எந்த ஒரு கல்வி நிறுவனத்தின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிருந்து 30.00 மீட்டர் என்று இருப்பதை 6.00 மீட்டராக மாற்றி அமைக்கும்படி கேட்டுள்ளார்கள்.

மேற்கண்ட சாலையோர விற்பனை தடை செய்யப்பட்ட மண்டலங்களின் நிலத்தினை மேற்கண்டவாறு மாற்றி அமைத்து துணைவிதிகளில் தக்க மாற்றம் செய்து நடைபாதை வியாபாரிகளின் வாழ்வாதாரத்தினைப் பாதுகாத்து தரும்படி திரு.முகமது ஜக்கரியா அவர்களின் 01.02.2019ந் தேதிய விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

## Dharapuram Municipality

Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Bye-laws, 2018

**NOTIFICATION**

Roc.No.2795/2016/F1

In exercise of the Powers conferred by Section 37 of the Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Act, 2014 (Central act 7 of 2014), and subject to the other Provisions of the Act, the Tamil Nadu Street Vendors (Protection of Livelihood, Regulation of Street Vending and Licensing) Scheme, 2015 and the Tamil Nadu Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Rules, 2015 made there under, the Dharapuram Municipality, hereby makes the following bye–laws for the Street Vending.

In accordance with chapter XIV section 306 of the Tamil Nadu District Municipalities Act, 1920 and their subsequent revisions in the sub-sections thereof and in order to ensure effective regulation of Street Vending in the Dharapuram Municipality, the Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Bye-Laws, 2018 are framed.

**CHAPTER I**

**PRELIMINARY**

1. **Short title and Commencement-** (1) These Bye – Laws may be called the Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Bye-laws, 2018 for Dharapuram Municipality.

   (2) It shall come into force on the date of its publication

2. **Definitions** - In these bye-Laws, unless the context otherwise requires,-

(i) “*Act*” means the Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending ) Act, 2014 (Central Act 7 of 2014);

(ii) “*Plan*” means a plan prepared under section 21 of the Act;

(iii) “R*ules*” means The Tamil Nadu Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Rules, 2015;

(iv) “*Scheme*” means the Tamil Nadu Street Vendors (Protection of Livelihood, Regulation of Street Vending and Licensing) Scheme, 2015 framed under section 38 of the Act;

(v) "*town vending Committee*" means a town vending Committee constituted under the rules;

Words and expressions defined in the Act, Rules or Scheme and used in these Bye-Laws shall have the same meaning as respectively assigned to them in the Act, Rules and Scheme.

## CHAPTER – II

## 3.REGULATION AND MANNER OF VENDING IN VENDING ZONES

(1) The town vending committee shall decide vending zones considering the intensity of foot falls, road width and the vehicular and pedestrian movement in the roads in the area.

(2) The carrying capacity of an area would put the limit on the number of street vendors which can be positioned in any area. It shall be the duty of the designated official of the Dharapuram Municipality to keep a check that the number of mobile vendors at a specific place shall not cross the limit fixed by the town vending committee.

(3) The restricted vending zones are mainly linked up with the road width, and the roads of the following description have been put in this category in the plan;

- (i) No stationery vending is proposed on the roads having very small width equal to 6 meters having two way traffic. However, street vending can be allowed if any such roads are declared as no vehicular road, at any point of time.
- (ii) No street vending for the roads having small width between 3 meters to 5 meters. However, street vending can be allowed if such road is declared one way vehicular road.
- (iii) One side street vending on the roads having reasonably big width between 5 meters to 6 meters.
- (iv) Both side street vending for the roads having big width 10 meters and above.
- (v) The number of street vendors shall be decided after taking into consideration the holding capacity of each designated vending area on such a road,
- (vi) Such stationary vending shall be allowed after taking the clearance from traffic police regarding the smooth vehicular and pedestrian movement. If necessary, road side parking shall be banned in areas where street vending is allowed.

(vii) Mobile vending shall be allowed on such roads considering sufficient space for traffic and pedestrian movement, and
(viii) Suggestive road designing as provided in the Annexure appended to these bye-laws.

(4) No vending zones,-
(i) 6 meters from the entry and exit points of the Government buildings, High Court, Other Courts, District Collectorate, Offices of District Panchayat, Municipal Corporation / Municipality, Fire Brigade stations etc.
(ii) 50 meters from the entry and exit points of railway stations.
(iii) 30 meters on both the sides of railway crossing falling within the city limits.
(iv) 25 meters from the entry and exit points of bus terminus.
(v) No vending in the areas as enjoined in the relevant provision of Ancient Monuments and Archaeological Sites and Remains Act, 2010 and the State Archaeological Monument Protection Act.
(vi) The areas prohibited under the provisions of the Built Heritage Conservation Rules.
(vii) 30 meters from any crossing of two or more roads on all sides.
(viii) 6 meters on both the side from the entry and the exit of any educational institution.
(ix) Any Area which the state has prohibited from being used as vending space from the angle of security.
(x) Any other area which the local Body in consultation with the Town Vending Committee considers fit to be included in the category of no vending zone,

Note: No existing market or a natural market as identified under the survey is to be included as a no–vending zone.

**4.Restriction on street vendors**,- A street vendor who has been granted the certificate of vending for any vending zones shall not-

(i) obstruct or interfere with vehicle, bi-cycle or pedestrian traffic or their safety,
(ii) obstruct or interfere with doorways, entrances, fire doors or emergency exits abutting the street.
(iii) obstruct or interfere with any utilities like water supply, sewerage, telephone, electricity, or similar installations.
(iv) obstruct or interfere with any other structures, sign boards, display units, city works or operations, on or adjacent to the street.
(v) sell any objectionable goods or services or merchandise etc.
(vi) occupy more space than allotted by the town vending committee
(vii) sell goods or service or merchandises after fixed hours as specified by the town vending committee.

(viii) throw garbage anywhere except at specific places identified by the local authority.

(ix) sell the goods or service or merchandises after expiry of the certificate of vending, and

(x) make use of loudspeakers, megaphones, sound systems or other amplification equipment and reflective signage.

**5.Responsibility of Street vendors**,- It shall be the duty of the street vendors or his family members or employee to,-

(i) Comply with all the conditions specified in the certificate of vending;

(ii) vend in the place specified in the certificate of vending;

(iii) display the certificate of vending at the vending place all the time;

(iv) ensure that either the street vendors or his family member whose name has been mentioned in the certificate of vending nor his employee remains present at the vending place during the vending hours;

(v) keep the vending place safe and in good conditions at all the times;

(vi) comply with any safety and sanitary requirement of the local authority;

(vii) comply with all the requirements of the Prevention of Food Adulteration Act, 1954 or any other laws, as applicable :

(viii) comply with the Municipal Solid Waste Management Rules, 2016;

(ix) comply with the Plastic Waste Management Rules, 2016;

(x) produce the certificate of vending when demanded by the competent authority, and

(xi) Follow all the requirement of these bye-Laws

## CHAPTER – III

## FEES, CHARGES, TAXES AND PENALTIES

**6.Vending Fees:-** (1) Vending Fees to be paid to the local authority by the Street vendors.

(2) The vending fees under clause (1) shall be as mentioned in the table below:-

| **Sl. No.** | **Category of Street Vendors** | **Area** | **Vending Fee** |
|---|---|---|---|
| 1. | Stationary Vendor (Full time) | Upto 10 sq.ft. | 1% of the Guideline value subject to minimum of Rs.750/- per annum |
| | | From 10 to 25 sq.ft. | 2% of the Guideline value subject to minimum of Rs.1500/- per annum |
| | | More than 25 sq.ft. | 3% of the Guideline value subject to minimum of Rs.3000/- per annum |

| | | | |
|---|---|---|---|
| 2. | Stationary Vendor (Part time or time sharing ) | Upto 10 sq.ft. | 0.5% of the Guideline value subject to minimum of Rs.375/- per annum |
| | | From 10 to 25 sq.ft. | 1.0% of the Guideline value subject to minimum of Rs.750/- per annum |
| | | More than 25 sq.ft. | 1.5% of the Guideline value subject to minimum of Rs.1500/- per annum |
| 3. | Mobile Vendor (with motor vehicle) | Upto 10 sq.ft. | Rs.750/- per annum |
| | | From 10 to 25 sq.ft. | Rs.1500/- per annum |
| | | More than 25 sq.ft. | Rs.3000/- per annum |
| 4. | Mobile Vendor (without motor vehicle) | Upto 10 sq.ft. | Rs.375/- per annum |
| | | From 10 to 25 sq.ft. | Rs.750/- per annum |
| | | More than 25 sq.ft. | Rs.1500/- per annum |
| 5. | Mobile Vendor (Headloads) | - | Rs.250/- per annum |

(3) Once in three years the Vending Fees shall be revised and published in the notice board of the local body.

**7. Maintenance Charges:-** (I) The monthly maintenance charges to be paid to the local authority for the civic amenities and facilities in the vending zones shall be according to the category to the street vendors and the status of the market. The categories of the vendors and markets shall be decided by the town vending committee.

(2) The charges under clause (1) shall not be less than Rs. 100/- and more than Rs.1000/- per month .

**8. Penalty to be levied:-** (1) If any street vendor-

(i) who fails to relocate to the place specified in the certificate of vending or vacate the existing restricted or prohibited zone

(ii) indulges in vending activities without the certificate of vending or contravenes the term of certificate of vending or contravenes any other terms and conditions specified for the purpose of regulating street vending under the Act, rules or scheme made there under,

shall be liable to pay a penalty (three) times of the amount of the monthly maintenance charge.

(2) if the street vendor breaches the conditions laid down in the Certificate of Vending three times, his certificate of vending shall be suspended and if the street vendors breaches the condition the 4th time, his certificate shall be cancelled.

## CHAPTER – IV

**MISCELLANEOUS**

**9. Regulation of traffic in vending zones:-** (1) Wherever a vending zone is declared by the town vending committee, the traffic police shall decide about one way traffic, speed limit, parking, movement of heavy vehicles and such other incidental matters. In a case where the traffic police does not agree with the declaration of the vending zone in a particular area, the town vending committee shall reconsider in respect of vending zones and decide either to shift or to cancel the zone for such areas.
(2) The local authority shall clearly earmark the vending area, footpath and carriage way in the vending zones.
**10. Regulation of quality of products and services provided to public in vending zones:-** Any vendor, who sells food articles, readymade or processed, on the site, he shall follow all the provisions of the Prevention of Food Adulteration Act, 1954. In case of failure, penal measures shall be initiated by the concerned authority as provided in that Act and on conviction by the competent court, his certificate of vending shall be cancelled by the town vending committee with immediate effect.
**11. Regulation of civic services in vending zones:-** (1) The public toilet and drinking water facilities be provided in the vending zones by the local authority.
(2) The proper collection of solid waste management system shall be provided by the local authority.
(3) The lighting to vendors shall be allowed by rechargeable lamps or self energizing mechanism.
4) No individual electricity and water connection be allowed in the vending zones.
5) Illegal tapping of electricity from the electricity post is prohibited.

## தாராபுரம் நகராட்சி

**சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018**

<u>அறிவிக்கை</u>

ந.க.எண். 2795/2016/எப்1

சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) 37வது பிரிவின்கீழ் வழஙகப்பட்டுள்ள அதிகாரஙகள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை) விதிகள், 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுஙகுமுறை மற்றும் உரிமம் வழஙகுதல்) திட்டம், 2015–ன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் தாராபுரம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை) துணை விதிகள், 2018 கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்படுகின்றது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 அத்தியாயம் 14 பிரிவு 306 மற்றும் அதன் உட்பிரிவுகளில் வழஙகப்பட்டுள்ள அதிகாரஙகளின்படியும், அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் திருத்தஙகளுக்கு உட்பட்டும், மற்றும் சாலையோர விற்பனையினை ஒழுஙகுப்படுத்தவும், தாராபுரம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை) துணை விதிகள், 2018 ஏற்படுத்தப்படுகின்றது.

**அத்தியாயம்–1**

## முதனிலை

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.—** இந்த துணை விதிகள் தாராபுரம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 என்றழைக்கப்படும்.

(2) இந்த துணை விதிகளானது வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்

2. **பொருள் வரையறைகள்.—** இந்த துணை விதிகளில், உபயோகப்படும் வார்த்தைகளுக்கான பொருள் வரையறை,

**(i)** "சட்டம்" என்பது சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) என்று பொருள்படும்;

**(ii)** "விற்பனை திட்டம்" என்பது சட்டத்தின் 21ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட விற்பனை திட்ட வரைப்படம் என்று பொருள்படும்;

**(iii)** "விதிகள்" என்பது தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 என்று பொருள்படும்;

**(iV)** "திட்டம்" என்பது சட்டத்தின் 38வது பிரிவின் கீழ் கட்டமைக்கப்பட்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015 என்று பொருள்படும்;

**(V)** "நகர விற்பனைக் குழு" என்பது விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நகர விற்பனைக் குழு என்று பொருள்படும்;

சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட வார்த்தைகளும், வெளிபாடுகளும் இந்த துணை விதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அவை முறையே சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் கொண்டுள்ள அதே பொருள்படும்.

## அத்தியாயம்—2

## விற்பனை மண்டலத்தில் விற்பனை செய்யும் விதம் மற்றும் ஒழுங்கு முறைகள்

**3.(1)** பாத சாரிகளின் நடமாட்டம் (Foot fall) மற்றும் சாலையின் அகலம், வாகனம், மற்றும் பாதசாரிகளுக்கான சீரான இயக்கம் ஆகியவற்றின் தன்மையை கருத்தில் கொண்டு விற்பனை மண்டலஙகளை நகர விற்பனைக் குழு முடிவு செய்யும்.

(2) ஒரு இடத்தின் கொள்திறனுக்கேற்ப சாலையோர வியாபாரிகளின் எண்ணிக்கை வரையறுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டவாறு நடமாடும் விற்பனையாளர்களின் எண்ணிக்கை வரம்பை மீறாமல் இருப்பது குறித்து தாராபுரம் நகராட்சியால் அஙகீகரிக்கப்பட்ட அலுவலரால் சரிப்பார்க்கப்பட வேண்டும்.

(3) சாலையின் அகலத்தைக் கொண்டும், சாலை விவரிப்பு குறித்தான கீழ்காணும் விவரஙகளைக் கொண்டும் இத்திட்டத்தில் கட்டுபடுத்தப்பட்ட விற்பனை மண்டலஙகளை விவரிக்கப்பட வேண்டும்.

(i) இரு வழி போக்குவரத்து கொண்ட 6 மீட்டர் அகலம் கொண்ட சிறிய சாலைகளில், நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகளில் எந்தவித நேரத்திலும் வாகனஙகள் அனுமதிக்கப்படாத சாலையாக அறிவிக்கப்பட்டால், அச்சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(ii) 3 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை அகலமான சிறிய சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகள் ஒரு வழி வாகன சாலை என அறிவிக்கப்பட்டிருந்தால், சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iii) 5 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை அகலமான சாலைகளில், சாலையின் ஒரு புறத்தில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iV) 10 மீட்டர் மற்றும் அதற்கு மேல் அகலமான பெரிய சாலைகளில், சாலையின் இரு புறமும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(V) ஒரு சாலையில் விற்பனைஅனுமதிக்கப்பட்ட இடத்தில் அதன் கொள்திறனுக்கேற்ப சாலையோர விற்பனையாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(Vi) சீரான போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் குறித்து காவல்துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் தான் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால், அந்த இடத்தில் வாகன நிறுத்தம் தடை செய்யப்பட வேண்டும்.

(Vii) வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு தான், சாலைகளில் நடமாடும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும்.

(Viii) சாலை வடிவமைப்பு குறித்தான அறிவுரைகள், இந்த துணை விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(4) சாலையோர விற்பனை தடைச் செய்யப்பட்ட மண்டலங்களிள்,

(i) அரசு கட்டிடங்கள், உயர்நீதி மன்றம், பிற நீதிமன்றஙகள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மாவட்ட ஊராட்சி / மாநகராட்சி / நகராட்சி அலுவலகஙகள், தீயணைப்பு நிலையஙகள் ஆகியவற்றின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 6 மீட்டர் நீளத்திற்கும்,

(ii) இரயில் நிலையஙகளின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

(iii) நகர எல்லைக்குட்பட்ட இரயில் கடவுப்பாதையின் இரு பக்கஙகளிலும் 30 மீட்டர் நீளத்திற்கும்,

(iV) பேருந்து நிலையஙகளின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 25 மீட்டர் நீளத்திற்கு,

(V) பண்டைய நினைவுச்சின்னஙகள் மற்றும் தொல்பொருளியல் தளஙகள் மற்றும் அகழ்வுகள் சட்டம், 2010ன்கீழ் அறிவிக்கப்பட்ட இடஙகளில் பாதுகாப்பு கருதி சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது.

(Vi) மரபுரிமை சொத்து காப்பு விதிகளில் தடை செய்யப்பட்ட பகுதிகள்

(Vii) இரண்டு அல்லது அதிகமான சாலைகள் குறிப்பிட்ட இடஙகளில் அனைத்து பக்கஙகளில் 30 மீட்டர் நீளத்திற்கு

(Viii) ‘எந்த ஒரு கல்வி நிறுவனத்தின் நுழைவு வாயில் மற்றும் வெளியேரும்
வாயிலிருந்து 6 மீட்டர் நீளத்திற்கு.

(ix) பாதுகாப்பு கோணத்தில் தடை செய்யப்பட்ட எந்த பகுதியிலும்

(x) நகர விற்பனைக் குழுவின் ஒப்புதல் பெற்று நகரின் எந்த ஒரு பகுதியிலும் சாலையோர விற்பனை தடை செய்வது குறித்து உள்ளாட்சி அமைப்பு முடிவு செய்து, அத்தகைய இடஙகளில் சாலையோர விற்பனை தடை செய்யப்பட வேண்டும்.

**குறிப்பு–** கணக்கெடுப்பின்போது அறியப்பட்ட எந்தஒரு அஙகாடியையோ அல்லது இயற்கையாக அமைய பெற்ற அஙகாடியையோ, விற்பனை தடை செய்யப்பட்ட பகுதியில் இணைக்கக்கூடாது.

**4. சாலையோர விற்பனையாளர்களுக்கான கட்டுப்பாடு.–** எந்த ஒரு விற்பனை மண்டலத்திலும், விற்பனை செய்ய சான்று பெற்ற சாலையோர விற்பனையாளர்கள்;

(i) வாகன போக்குவரத்து, மிதி வண்டி மற்றும் பாதசாரி நடமாற்றத்திற்கு தடஙகல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(ii) கதவு, நுழைவு வாயில், தீயணைப்பு கதவுகள் அல்லது அவசரகால வெளியேறும் பாதை ஆகியவற்றிற்கு முட்டுகொடுத்து தடஙகல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iii) குடிநீர் வழஙகல், கழிவுநீர், தொலைபேசி, மின்சாரம் அல்லது இதே மாதிரியான அமைப்புகள் போன்ற எந்தவொரு பயன்பாட்டிற்கும் தடஙகல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iV) சாலையில் அல்லது அதன் பக்கத்தில் உள்ள எந்த கட்டமைப்புகளுக்கோ, வழிகாட்டு பலகைகள், அறிவிப்பு பலகைகள் , நகர வேலைகள் அல்லது நடவடிக்கைகளுக்கோ தடஙகல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(V) ஆட்சேபனைக்குரிய சேவைகளையோ அல்லது பொருட்களையோ விற்பனை செய்வதோ கூடாது,

(Vi) நகர விற்பனைக் குழுவால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை காட்டிலும் அதிகமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது,

(Vii) நகர விற்பனைக் குழுவால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின் சேவைகளையோ அல்லது பொருட்களை வணிகம் செய்வதோ கூடாது,

(Viii) உள்ளாட்சி அமைப்பால் அடையாளம் காணப்பட்ட இடஙகளை தவிர, இதர இடஙகளில் திடக்கழிவுகளை கொட்டக்கூடாது.

(ix) விற்பனை சான்றிதழ் காலாவதியாகிய பின்னர் பொருட்களையோ அல்லது சேவைகளையோ அல்லது விற்பனையோ செய்யக்கூடாது.

(x) ஒலி பெருக்கிகள், மெகா போன்கள், ஒலி அமைப்புகள் அல்லது பிற ஒலி பெருக்கி உபகரணஙகள் மற்றும் பிரதிபலிப்பு விளம்பரஙகள் ஆகியவற்றினை பயன்படுத்தக் கூடாது.

**5. சாலையோர வியாபாரிகளின் பொறுப்பு,–** சாலையோ வியாபாரிகள் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது பணியாளரின் கடமைகள்,

(i) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்,

(ii) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மட்டும் விற்பனை செய்யப்படவேண்டும்,

(iii) விற்பனை செய்யும் இடத்தில் விற்பனை சான்றிதழ் காட்சிக்கு எப்பொழுதும் வைக்கப்பட வேண்டும்,

(iV) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையோர விற்பனையாளர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் அல்லது அவரின் பணியாளர் விற்பனை இடத்தில் விற்பனை செய்யும்போது இருக்க வேண்டும்.

(V) எப்பொழுதும் விற்பனை இடத்தினை பாதுகாப்பாகவும், நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்,

(Vi) உள்ளாட்சி அமைப்பின் தேவைக்கேற்ப பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

(Vii) உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954 அல்லது இதர விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

(Viii) நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

(ix) நெகிழி கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

(x) தகுதியுடைய அலுவலர் கோரும்போது விற்பனை சான்றிதழ் காண்பிக்க வேண்டும், மற்றும்

(xi) இந்த துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும்.

## அத்தியாயம்–3

## கட்டணஙகள், வரிகள் மற்றும் அபராதஙகள்

**6. விற்பனை கட்டணம்,– (1)** சாலையோர வியாபாரிகள் உள்ளாட்சி அமைப்பிற்கு விற்பனை கட்டணம் செலுத்த வேண்டும்.

**(2)** உப விதி **(1)**ன்படியான விற்பனை கட்டணம் கீழ்க்காணும் பட்டியலின்படியாகும்.

| வ. எண். | சாலையோர விற்பனையாளரின் வகை | பரப்பளவு | விற்பனை கட்டணம் |
|---|---|---|---|
| 1. | நிலையான விற்பனையாளர் (முழு நேரம்) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்கு ரூ.750/–க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள்வரை | வழிகாட்டி மதிப்பில் 2 சதவீதம் – வருடத்திற்கு ரூ.1500/–க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வழிகாட்டி மதிப்பில் 3 சதவீதம் – வருடத்திற்கு ரூ.3500/–க்கு குறையாமல் |
| 2. | நிலையான விற்பனையாளர் (பகுதி நேரம் அல்லது நேர பகிர்வு) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 0.5 சதவீதம் – வருடத்திற்கு ரூ.375/–க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்கு ரூ.750/–க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வழிகாட்டி மதிப்பில் 1.5 சதவீதம் – வருடத்திற்கு ரூ.1500/–க்கு குறையாமல் |
| 3. | நடமாடும் விற்பனையாளர் (மேட்டார் பொருத்தப்பட்ட வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.750/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1500/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.3000/– |
| 4. | நடமாடும் விற்பனையாளர் (மேட்டார் பொருத்தப்படாத வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.375/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.750/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.1500/– |
| 5. | நடமாடும் விற்பனையாளர் (தலைசுமை) | – | வருடத்திற்கு ரூ.250/– |

(3) மூன்று வருடஙகளுக்கு ஒரு முறை விற்பனை கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்பின் விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

**7. பராமரிப்பு கட்டணம்,– (1)** சாலையோர விற்பனையாளரின் வகை மற்றும் அஙகாடியின் தகுதியின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்பால் செய்யப்பட்டுள்ள குடிமை நலன்கள் மற்றும் வசதிகளுக்காக மாதாந்திர பராமரிப்பு கட்டணம் செலுத்தப்பட வேண்டும். சாலையோர விற்பனையாளர்கள் மற்றும் அஙகாடி வகைகள் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்படும்.

(2) உப விதி (1)யில் குறிப்பிடப்பட்டுள்ள பராமரிப்பு கட்டணம் மாதத்திற்கு ரூ.100 /–க்கு குறையாமலும், ரூ.1000 /–க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

**8. அபராதம் விதித்தல்,–** எந்தவொரு சாலையோர விற்பனையாளரும்,

(i) விற்பனை சான்றிதழ்படி, மாற்று இடத்திற்கு செல்ல அல்லது காலி செய்ய தவறும்பட்சத்தில், அல்லது

(ii) விற்பனை சான்றிதழ் இல்லாமல் விற்பனை செயலில் ஈடுபட்டாலோ, விற்பனை சான்று மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்குமுறை சட்ட பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் திட்டத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறும்போது,

மாதாந்திர கட்டணத்தில் (மூன்று) மடஙகாக அபராதம் செலுத்தப்பட வேண்டும்.

(2) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சாலையோர விற்பனைபாளர் மூன்று முறைகள் மீறினால் அவரின் விற்பனை சான்று இடைநீக்கம் செய்யப்படும். நான்காவது முறையாக விதிமுறைகளை மீறினால் அவரின் விற்பனை சான்று ரத்து செய்யப்படும்.

## அத்தியாயம்– 4

### பலவகை

**9. விற்பனை மண்டலத்தில் போக்குவரத்தினை ஒழுங்குமுறை படுத்துதல்.– (1)** நகர விற்பனை குழுவால் அறிவிக்கப்பட்ட விற்பனை மண்டலஙகளில், ஒரு வழி வாகன போக்குவரத்து, வேக கட்டுப்பாடு, வாகன நிறுத்தம், கனரக வாகனஙகள் இயக்கம் மற்றும் இது குறித்த இதர பொருள்கள் குறித்து போக்குவரத்து காவல்துறையால் முடிவு செய்யப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் விற்பனை மண்டலம் அமைப்பது குறித்து போக்குவரத்து காவல்துறையால் அஙகீகரிக்கப்படவில்லையெனில், அந்த விற்பனை மண்டலத்தினை மாற்றியமைப்பது குறித்தோ அல்லது விற்பனை மண்டலத்தினை ரத்து செய்வது குறித்தோ நகர விற்பனைக் குழு பரிசீலனை செய்ய வேண்டும்.

(2) விற்பனை மண்டலத்தில், விற்பனை பகுதி, நடைபாதை மற்றும் வண்டி பாதை ஆகியவற்றினை உள்ளாட்சி அமைப்பால் தெளிவாக தெளிவுபடுத்த வேண்டும்.

**10. விற்பனை மண்டலத்தில் பொது மக்களுக்கு வழஙகப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தினை ஒழுஙகுபடுத்துதல்.–** எந்த ஒரு விற்பனையாளரும், தயார் செய்யப்பட்ட அல்லது அந்த இடத்தில் தயாரித்து விற்பனை செய்யும் உணவு பொருட்கள் குறித்து உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். தவறும்பட்சத்தில், மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகாரம் பெற்ற அலுவலரால் தண்டனைக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் மற்றும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் தண்டனை வழஙகப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவால் அந்த சாலையோர வியாபாரியின் விற்பனை சான்றினை உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்.

**11. விற்பனை மண்டலஙகளில் குடிமை சேவைகளை ஒழுஙகுப்படுத்துதல்,– (1)** விற்பனை மண்டலஙகளில், பொது கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகளை உள்ளாட்சி அமைப்பால் ஏற்படுத்த வேண்டும்.

(2) உள்ளாட்சி அமைப்பால் திடக்கழிவுகளை சரியான முறையில் சேகரிக்கப்பட வேண்டும்.

(3) சாலையோர வியாபாரிகள் தனிநபர் தேவைக்கு மின் செரிவூட்டும் சாதனம் (rechargeable lamps) அல்லது சுயமாக மின் உற்பத்தி செய்யும் சாதனஙகள் உபயோக படுத்தல் வேண்டும்.

(4) விற்பனை மண்டலஙகளில் தனி நபர் மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழஙகக் கூடாது.

(5) மின்சார கம்பஙகளிலிருந்து முறையற்ற மின் உபயோகத்தை தடுக்கப்படும்.

<u>அலுவலக குறிப்பு</u>

1. சாலையோர வியாபாரிகளின் நலனை கருத்தில் கொண்டு மேற்கண்ட துணை விதிகளில் தக்க திருத்தம் செய்த துணைவிதிகள் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. மேற்கண்ட சாலையோர வியாபாரிகளுக்கான விதிகளை திருத்தம் செய்து மாவட்ட அரசிதழில் வெளியிடவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

28. தாராபுரம் நகராட்சிக்கு சொந்தமான கடைகளில் சேவைவரி வசூல் செய்யப்பட்டது. சுங்கத்துறைக்கு செலுத்த காலதாமதம் ஏற்பட்டதால் தண்டவட்டி செலுத்துவதற்கு கலால் மற்றும் சுங்கத்துறை ஆலோசகர் திரு.பி.ராமகிருஷ்ணன் அவர்களால் சென்னை (TRI BUNAL) நீதிமன்றத்தில் தண்டவட்டி செலுத்துவது குறித்து மேல்முறையீடு செய்யப்பட்டது. மேற்படி வழக்கு சம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆஜரான வகையிலும் சென்னை சென்று வர ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/- RA Associates – திரு.ராமகிருஷ்ணன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்
**ந.க.எண். 18605/2008/அ3**

29. தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 25 கீதா நகர் பகுதியில் தார்தளம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.17.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 19.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திருவாளர்.என்கான் இன்ஜினிரியங ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 9.07 % அதிகம் |
| 2. | திருவாளர்.TTK அசோசியட்ஸ், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 11.09 % குறைவு |
| 3. | திரு.ஆர்.நாகராஜ், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 2.14 % குறைவு |
| 4. | திரு.கே.எஸ்.கோவிந்தராஜ், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 5.52 % குறைவு |
| 5. | திரு.எ.கணேசன், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 9.51 % குறைவு |

வரப்பெற்ற ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 11.09% குறைவாக கொடுத்துள்ள திருவாளர்.TTK அசோசியட்ஸ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**30.** தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் **16** புதிய காவல் நிலைய சாலையில் பாலாஜி பவன் அருகில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.**3.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு **19.02.2019** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி விகிதம்** |
|---|---|---|
| 1. | திருவாளர்.ஸ்ரீசக்தி விநாயகர் கண்ஸ்ட்ரக்சன் அன் வுட் ஒர்க்ஸ், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட **1.94** % குறைவு |
| 2. | திரு.கே.எஸ்.கோவிந்தராஜ், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட **5.38** % குறைவு |
| 3. | திரு.டி.சதாசிவம், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட **5.83** % குறைவு |

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **5.83**% குறைவாக கொடுத்துள்ள திரு.டி.சதாசிவம், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**31.** தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் **26** கொட்டாபுளிபாளையம் ரோடு பிஷப் தார்ப் கல்லூரி முதல் நகராட்சி முடிவு வரையுள்ள பகுதியில் புதிதாக தார்தளம் அமைக்கும் பணிக்கு ரூ.**20.50** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு **19.02.2019** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி விகிதம்** |
|---|---|---|
| 1. | திருவாளர்.குகன் அன் கோ, ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட **5.44** % குறைவு |
| 2. | திருவாளர்.TTK அசோசியட்ஸ், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட **15.02** % குறைவு |
| 3. | திருவாளர்.சி.எஸ்.கண்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட **8.47** % குறைவு |

| | | |
|---|---|---|
| 4. | திரு.கே.எஸ்.கோவிந்தராஜ், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 10.25 % குறைவு |
| 5. | திரு.எ.கணேசன், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 10.81 % குறைவு |

வரப்பெற்ற ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 15.02% குறைவாக கொடுத்துள்ள திருவாளர்.TTK அசோசியட்ஸ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**32.** தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 20 ஜவகர் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.9.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 22.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.கே.எஸ்.கோவிந்தராஜ், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 11.73 % குறைவு |
| 2. | திரு.ஆர்.நாகராஜ், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 14.60 % குறைவு |
| 3. | திருவாளர்.TTK அசோசியட்ஸ், ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 12.09 % குறைவு |
| 4. | திரு.எ.சின்னசாமி, ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 16.84 % குறைவு |

வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 16.84% குறைவாக கொடுத்துள்ள திரு.எ.சின்னசாமி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**33.** தாராபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகன எண்.TN 78 9492-ற்கு வருடாந்திர தகுதிச் சான்று பெற உத்தேச மதிப்பு ரூ.120000/– இலட்சம் மதிப்பீட்டில் 20.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளபடி ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | காந்தி மோட்டார்ஸ், ஈரோடு | ரூ.119700/– |
| 2 | மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், பி.என்.ரோடு, திருப்பூர். | ரூ.122250/– |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள காந்தி மோட்டார்ஸ், ஈரோடு நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி தொகை.ரூ.119700/– ஏற்கலாம். அதற்கு ஆகும் செலவீனத் தொகை வழஙகவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.304/2019/எச்1**

**<u>அலுவலகக்குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்

**34.** தாராபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகன எண்.TN 33-AY8568-ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்ய உத்தேச மதிப்பு ரூ.107000/– இலட்சம் மதிப்பீட்டில் **20.02.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளபடி ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | காந்தி மோட்டார்ஸ், ஈரோடு | ரூ.106600/– |
| 2 | மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், பி.என்.ரோடு, திருப்பூர். | ரூ.107600/– |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள காந்தி மோட்டார்ஸ், ஈரோடு நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி தொகை.ரூ.106600/– ஏற்கலாம். அதற்கு ஆகும் செலவீனத் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.103/2019/எச்1**

**<u>அலுவலகக்குறிப்பு –</u>** மன்றம் அனுமதிக்கலாம்

**35.** தாராபுரம் நகராட்சி ஐந்து முக்கு மற்றும் அனுமந்தாபுரம் சாலை சந்திப்பில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் முள்கம்பி வேலி அமைக்கும் பணிக்கு ரூ.70000.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 07.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு,தஙகராஜ்,<br>ஒப்பந்ததாரர், | மதிப்பீட்டு விலையை விட 3.21 % குறைவு |
| 2. | திருவாளர்.பழனி ஆண்டவர் அன் கோ,<br>ஒப்பந்ததாரர், | மதிப்பீட்டு விலையை விட 18.13 % குறைவு |

| | | |
|---|---|---|
| 3 | திரு.எ.சின்னசாமி,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விலையை விட 6.30 % குறைவு |
| 4 | திரு.கே.எஸ்.கோவிந்தராஜ்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விலையை விட 5.84 % குறைவு |

வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 18.13% குறைவாக கொடுத்துள்ள திருவாளர்.பழனி ஆண்டவர் அன் கோ, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**36.** தாராபுரம் நகராட்சியில் சந்தைப்பேட்டை பகுதியில் உள்ள கழிப்பிடம் மற்றும் ஆர்.ஆர்.சி கட்டட கூரையை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு ரூ.85000.00/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 07.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு,தஙகராஜ்,<br>ஒப்பந்ததாரர், | மதிப்பீட்டு விலையை விட 0.07 % குறைவு |
| 2. | திருவாளர்.திருச்செந்தூர் முருகன் அன் கோ,<br>ஒப்பந்ததாரர், | மதிப்பீட்டு விலையை விட 15.73 % குறைவு |
| 3 | திரு.எ.சின்னசாமி,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விலையை விட 10.58 % குறைவு |
| 4 | திரு.கே.எஸ்.கோவிந்தராஜ்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விலையை விட 4.47 % குறைவு |

வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 15.73% குறைவாக கொடுத்துள்ள திருவாளர்.திருச்செந்தூர் முருகன் அன் கோ, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**37.** தாராபுரம் நகராட்சி மீன் மார்க்கெட் கட்டடத்திற்கு கூடுதலாக முகப்பு தோற்றம் 16 கடைகளுக்கான மின் இணைப்புக்கான பஸ்பார் சேம்பர் அமைத்தல் மற்றும் சிறுநீர் கழிப்பறை

மற்றும் வடிகாலுக்கு இரும்பு கிரில் மூடி அமைக்கும் பணிக்கு ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 22.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திருவாளர்.எம்.முருகேசன் அன் கோ, ஒப்பந்ததாரர், ஈரோடு | மதிப்பீட்டு விலையை விட 0.03 % குறைவு |
| 2. | திருவாளர்.அக்சயா அசோசியட்ஸ், ஒப்பந்ததாரர், சேலம் | மதிப்பீட்டு விலையை விட 0.10 % அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.03% குறைவாக கொடுத்துள்ள திருவாளர்.எம்.முருகேசன் அன் கோ, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

38. தாராபுரம் நகராட்சி புதிய அலுவலக கட்டடத்தில் நகர்மன்ற தலைவர் அறை, நகர்மன்ற கூடம் அறை, நகராட்சி ஆணையர் அறை முகப்பு கதவுகளுக்கு முகப்பு அமைப்பு அமைத்தல் மற்றும் நகர்மன்ற கூடத்தில் நகர்மன்ற தலைவருக்கான மேடை அமைத்தல் மற்றும் நாற்காலிகள் அமைத்தல் பணிக்கு ரூ.9.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 22.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திருவாளர்.நீல்கிரி பர்னிச்சர் வேல்டு, கோயம்புத்தூர். | மதிப்பீட்டு விலையை விட 0.49 % குறைவு |
| 2. | திருவாளர்.ஐஸ்வரியா பர்னிச்சர், கோயம்புத்தூர். | மதிப்பீட்டு விலையை விட 0.31 % அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.49% குறைவாக கொடுத்துள்ள திருவாளர்.நீல்கிரி பர்னிச்சர் வேல்டு, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**39.** தாராபுரம் நகராட்சியில் வார்டு 26 பழைய வீட்டு வசதி வாரியம் பகுதியில் நீர் உறிஞ்சு படுகையுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.1,05,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 07.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திருவாளர்.திருச்செந்தூர் முருகன் அன் கோ, ஒப்பந்ததாரர், | மதிப்பீட்டு விலையை விட 7.18 % அதிகம் |
| 2 | திரு.கே.எஸ்.கோவிந்தராஜ், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விலையை விட 4.52 % அதிகம் |

மேற்காணும் குறைந்த ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.52% அதிகம் என்ற நிலையில் உள்ளது. எனவே, நகராட்சி பொறியியல் கையேட்டில் தெரிவித்துள்ளபடி ஒப்பந்தப்புள்ளி விதிகளில் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தைவிட கூடுதலாக கோரியுள்ள விலை விகிதத்தினை ஏற்றுக் கொள்ள இயலாத நிலை காரணமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே.எஸ்.கோவிந்தராஜ் ஒப்பந்ததாரருக்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.5236/2018/இ1 நாள்.11.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை குறைத்துதரக் கோரி விலைக்குறைப்புக் கடிதம் (Negotiation Letter) வழஙகப்பட்டது. அதன்படி ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது விலைக்குறைப்பு கடிதம் நாள்.12.02.2019ல் விலை விகிதம் மதிப்பீட்டு விலையை விட 0.05% குறைவாக கொடுத்து ஒப்புதல் அளித்துள்ளார்.

எனவே, விலை குறைவாக கொடுத்துள்ள திரு.கே.எஸ்.கோவிந்தராஜ் ஒப்பந்ததாரர், ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**40.** தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட தலைமை நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள 5 எண்ணிக்கையிலான 20 எச்.பி திறன் கொண்ட போர் வெல் மோட்டார்கள் உள்ளன. வறட்சி காலஙகளில் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து நகராட்சியின் அனைத்து பகுதிகளிலும், தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளதால் அஙகுள்ள மோட்டார்கள் உள்ள பைப்கள் பழுதடைந்த நிலையில் உள்ள குழாய்களை மாற்றி பராமரிப்பு செய்யும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**41.** தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும், குடிநீர் அபிவிருத்தி பணிகள் மூலம் அமைக்கப்பட்டுள்ள புதிய குடிநீர் விநியோக குழாய்களுக்கு (இண்டர்லிங்க்) குடிநீர்

மெயின் குழாய்களிலிருந்து இணைக்கும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**42.** தாராபுரம் நகராட்சியில் குடிநீர் நிதி 2018–19ன் கீழ் நகராட்சிக்கு உட்பட்ட மார்கெட் டேங்கில் மழைநீர் கால்வாய் மற்றும் இன்டர்லாக் கற்கள் அமைக்கும் பணிக்கு ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 19.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு ஆறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஓப்பந்ததாரர் பெயர் | ஓப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திருவாளர்.TTK அசோசியட்ஸ்,<br>ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 12.94 %<br>குறைவு |
| 2 | திரு.கே.எஸ்.கோவிந்தராஜ்,<br>ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 5.43 %<br>குறைவு |
| 3 | திருவாளர்.பழனி ஆண்டவர் அன் கோ,<br>ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 6.39 %<br>குறைவு |
| 4 | திரு.நாகராஜ்,<br>ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 2.12 %<br>குறைவு |
| 5 | திரு.சின்னசாமி,<br>ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 11.46 %<br>அதிகம் |
| 6 | திரு.ஆர்.தஙகராஜ்,<br>ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 7.95 %<br>குறைவு |

பெறப்பட்ட ஆறு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 12.94% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர்.TTK அசோசியட்ஸ், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**43.** தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட தலைமை நீரேற்று நிலைய வளாகப் பகுதியில் உள்ள பணியாளர்கள் தங்கும் அறை மற்றும் கலெக்ஷன் வெல் அறைகள் உள்ள மின் இணைப்புகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. அந்த மின் இணைப்புகள் சரி செய்து மின் விளக்குகள் பொருத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

44. தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் உள்ள ஆழ்துளை கிணறுகளில் உள்ள மோட்டார்களை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், 5 எண்ணிக்கையிலான பேனல் போர்டுகள் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

45. இந்நகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தப்பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட சரக்கு மற்றும் சேவைவரி (GST) தொகையினை அரசாணையின்படி வணிகவரித்துறைக்கு ஒவ்வொரு மாதமும் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. மேற்படி ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவைவரி தொகை தனியார் கணக்காளர் மூலம் சரிக்கட்டுதல் செய்யப்பட்டு, அதன்படி உரிய தொகை வணிக வரித்துறைக்கு செலுத்தப்படுவருகிறது. தனியார் கணக்காளர் மூலம் சரிக்கட்டுதல் செய்யப்படுவதற்கு நகராட்சி மூலம் தொகை வழங்க உத்தேச செலவினம் ரூ.18000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்:4535/2018/இ1**

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி தொகையினை நகராட்சி பொதுநிதி 2019—20இல் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

46. தாராபுரம் நகராட்சி அலுவலக வளாகம் மற்றும் தலைமை நீரேற்று நிலையம் ஆகிய இடஙகளில் சோலார் மின் விளக்குகள் அமைக்கும் பணிக்கு உத்தேசமாக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4,50,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இதற்கானன செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

**47.** தாராபுரம் நகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ் உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை நவீன முறையில் **(Bio-mining)** சுத்தம் செய்து உரக்கிடங்கினை புதுப்பிக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்1191/பி3/2019 நாள்.21.01.2019ன் படி ரூ.279.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியதையடுத்து தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் தொழில் நுட்ப அனுமதி கடித ந.க.எண்.18281/2016/DO1 நாள்.22.01.2019ன் படி 15.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஆன்லைன் டெண்டரில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. மேலும். ஆப்லைனில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

1) M/s.Our Land Engineering works PVT, Ltd., Chennai.
2) M/s.Saran Enviro Services PVT, Ltd., Chennai.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் இந்நகராட்சி கூர்ந்தாய்வு குழுவினரால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளார்கள். எனவே, தொழில்நுட்ப தகுதி பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களுக்கும் அறிவிப்பு வழஙகப்பட்டு விலை விகித உறை (price bid) 25.02.2019 அன்று காலை 11.00 மணியளவில் திறக்கப்பட்டது. அதில் கீழ்கண்டவாறு உள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s.OurLand Engineering works PVT, Ltd., Chennai. | மதிப்பீட்டை விட 8.92% அதிகம் |
| 2 | M/s.Saran Enviro Services PVT, Ltd., Chennai. | மதிப்பீட்டை விட 9.39% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் அதாவது மதிப்பீட்டை விட 8.92% அதிகம் என்ற அளவில் M/s.OurLand Engineering works PVT, Ltd., Chennai. ஒப்பந்ததாரர், அவர்கள் கோரியுள்ளார்.

இப்பணிக்கான மதிப்பீடு 21.02.2018 அன்று தலைமை பொறியாளர் தலைமையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் தீர்மானம் செய்யப்பட்டதாகும். மேற்காணும் குறைந்த ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 8.92% அதிகம் என்ற நிலையில் உள்ளது. எனவே, நகராட்சி பொறியியல் கையேட்டில் தெரிவித்துள்ளபடி ஒப்பந்தப்புள்ளி விதிகளில் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தைவிட கூடுதலாக கோரியுள்ள விலை விகிதத்தினை ஏற்றுக் கொள்ள இயலாத நிலை காரணமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர் M/s.OurLand Engineering works PVT, Ltd., Chennai அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண்.411/2017/இ1 நாள்.25.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை குறைத்துதரக் கோரி விலைக்குறைப்புக் கடிதம் (Negotiation Letter) வழஙகப்பட்டது. அதன்படி ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது விலைக்குறைப்பு கடிதம் நாள்.25.02.2019ல் விலை விகிதம் மதிப்பீட்டு விலையை விட 0.03% குறைவாக கொடுத்து ஒப்புதல் அளித்துள்ளார்.

எனவே, விலை குறைவாக கொடுத்துள்ள M/s.OurLand Engineering works PVT, Ltd., Chennai. ஒப்பந்ததாரர், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
ந.க.எண்.411/2017/இ1

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**48.** தாராபுரம் நகராட்சி 2018–19ஆம் ஆண்டு கணக்குகள் வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர்நிதி மற்றும் வடிகால்நிதி மற்றும் ஆரம்பக்கல்விநிதி கணக்குகள் Consultant வைத்து தயார் செய்ய வேண்டி உள்ளது. மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.50000–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.4346/2018/பி1**

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**49.** தாராபுரம் நகராட்சியின் 2019–20ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்டம் மற்றும் 2018–19ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்டம் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**ந.க.எண். 1175/2018/பி1**

**அலுவலக குறிப்பு:** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

50. தாராபுரம் நகராட்சி அனைத்து பிரிவினருக்கும் தேவையான கணினி சார்ந்த பொருட்களையும் 2019–20 ஆம் ஆண்டிற்கு தேவையான உத்தேச தொகை ரூ.5,50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**51.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13052/2016/பி2, நாள்.11.07.2017இல் இந்நகராட்சி முன் பண பதிவேட்டில் கணக்கு தலைப்பு **3051**இன் கீழ் நீண்ட காலமாக பொருள் விநியோகம் செய்யப்பட்ட நிலையில் முன்பணம் **2006** முடிய சரிகட்டப்படாமல் நிலுவையில் உள்ள தொகையினை மன்றத்தின் அனுமதியோடு வஜா செய்ய நடவடிக்கை மேற்கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிக்கு அரசு சார்புடைய நிறுவனத்திடமிருந்து முன்பணம் வழங்கி மூலப்பொருள் வாங்கியதை சம்பந்தப்பட்ட கணக்கில் ஈடு செய்யப்படாமல் **3051** தலைப்பின் கீழ்கண்ட தொகையினை **84–85** முதல் **2001** ஆம் ஆண்டு வரை விபரப்படி முன்பணபதிவேட்டிலிருந்து வஜா செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | நாள் | பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1. | 07.03.1985 | தெருவிளக்கு எல்க்ட்ரிக்ல்ஸ் | 1276.00 |
| 2 | 07.06.1985 | கோபிசெட்டிபாளையம்20லி பெட்ரோல் | 187.86 |
| 3 | 02.09.2012 | மருந்துகள் வாங்க | 7720.00 |

| | | | |
|---|---|---|---|
| 4 | 03.06.1994 | கலவை தீவனம் | 10900.00 |
| 5 | 10.08.1994 | நேரு வேலைவாய்ப்பு திட்டம் | 3800.00 |
| 6 | 31.01.1996 | மோட்டார் வாகனம் பழுது பார்த்தல் | 15000.00 |
| 7 | 20.01.1996 | எலக்ட்ரானிக்ஸ் தெருவிளக்கு | 10363.00 |
| 8 | 22.04.1998 | கொசு ஒழிபபு மருந்துகள் வாங்க | 18000.00 |
| 9 | 11.05.1998 | மாவட்ட வன ஈரோடு நகராட்சி பகுதியில் மரம் நடுதல் | 13157.00 |
| 10 | 05.01.2002 | Tamil nadu cement corporation | 165834.00 |
| | | **Total** | 246238.00 |

**அலுவலகக் குறிப்பு :** தொகை ரூ.246238/–ஐ வஜா செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

52. தாராபுரம் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை கடைஎண்.20க்கு 8 முறை ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில், 1, மற்றும் 8வது அழைப்புகளில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்ந்தப்புள்ளி கேள்வித் தொகையையாக மாதம் ஒன்றிற்கு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 14.09.2018 | 04.10.2018 | 24.10.2018 | 09.11.2018 | 27.11.2018 | 18.12.2018 | 08.01.2019 | 23.01.2019 |
| 1. | திரு.முருகேஷ், 39,குமாரபாளையம், நஞ்சியம்பாளையம் அஞ்சல், தாராபுரம். | 1300/- | - | - | - | - | - | - | 3100/- |
| 2 | பிரபு எல்.ஜி.ஜி.எஸ் காலனி, தாராபுரம். | 900/- | - | - | - | - | - | - | - |

மேற்படி வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.முருகேஷ் என்பவர் முதல் அழைப்பில் ரூ.1300க்கு வழங்கியுள்ளார். 2வது அழைப்பு முதல் 7வது அழைப்பு வரை எவரும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை. 23.01.2019 அன்று நடைபெற்ற எட்டாவது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் திரு.முருகேஷ் என்பவர் மாத வாடகையாக ரூ.3100க்கு வைத்துக்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி கடைக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது முந்தைய வாடகைத் தொகை ரூ.628–ஐ விட ரூ.2772 கூடுதலாகும். மேற்படி கடைக்கு இதற்கு மேல் வாடகைத் தொகை வர வாய்ப்பில்லை என்பதாலும், மேலும் நகராட்சியின் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு வரப்பெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையை ஏற்கவும், இதற்கு முன்னர் குத்தகைக்கு நடத்தி வந்த குத்தகைதாரர் பெயரில் நகராட்சியில் செலுத்தியுள்ள வைப்புத் தொகை வாடகை நிலுவைக்கு சரிகட்டிக் கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**53.** தாராபுரம் நகராட்சி பொறியியற்பிரிவில் உள்ள ஜெராக்ஸ் இயந்திரத்திற்கான 6 எண்ணிக்கை டோனருக்கான உத்தேச செலவு ரூ.60,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**54.** தாராபுரம் நகராட்சி பொதுப்பிரிவு, நகர்நலப்பிரிவு, கணினிபிரிவு ஆகிய பிரிவுகளுக்கு தேவையான KYOCERA ECOSYS M2040DN என்ற பிரிண்டர் 3 எண்ணிக்கையிலும் மத்திய அரசின் Governmemt Emarketting (GEM)ல் பதிவு செய்யப்பட்ட நிறுவனமான Hindusthan Automations நிறுவனத்தில்,

| | |
|---|---|
| Rs. 49017 x 3 = | Rs.147051/- |
| KYOCERA ECOSYS M2040DN | |
| Rs.12000 x2 = | Rs.24000/- |
| | Rs.171051/- |

எனவே உத்தேச செலவினம் ரூ.180000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.